பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 09 2025 6.30

தலைப்புச் செய்திகள்

1. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் மகளிர் உட்பட அனைத்துத் தரப்பினரும் பயனடைவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்த வரி சீர்திருத்தங்கள் வரலாற்றுச்சிறப்புமிக்கது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் மகளிர் பெரிதும் பயனடைவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக நாட்டு மக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான்கடுக்காக இருந்த இந்த வரிக் கட்டமைப்பு தற்போது ஐந்து சதவீதம் மற்றும் 18 சதவீதம் என இரண்டடுக்காக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதன்மூலம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்புத் திருவிழா ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்றும் திரு நரேந்திர மோடி அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

இந்த வரி சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக வேளாண், சுகாதாரம், ஜவுளி உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், உற்பத்தியை அதிகரிக்க இந்த நடவடிக்கை உதவிடும் என்றார்.

அனைத்துத் தரப்பினருக்குமான தீபாவளி பரிசுதான் இந்த வரிக் குறைப்பு என்று திரு அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை மூலம் ஒவ்வொரு குடும்பத்தினரும் பயனடைவதாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தினை பதிவு செய்துள்ள அவர், பொதுமக்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையே வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்க இந்த நடவடிக்கை உதவிடும் என்றார்.

இந்த வரி சீர்திருத்த நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் குறைகூறுவது ஏற்புடையதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக் காலத்தில் வெறும் பேச்சு அளவில் இருந்த திட்டங்களை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றியிருப்பதாக அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான அரசு சிமெண்டுக்கு 30 சதவீத வரி விதித்திருந்ததாகவும் தற்போது அது 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த சீர்திருத்தங்கள் செயல்பாட்டிற்கு வந்ததன் காரணமாக பொதுமக்களும் வணிகர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இந்த வரிக்குறைப்பு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நடுத்தர வர்க்கத்தினரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரும் இதன் மூலம் பயனடைந்துள்ளதாக தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த வரிக் குறைப்பு சிறு, குறு தொழில் துறையினருக்கு வரப்பிரசாதமாகும் என்று மதுரையை சேர்ந்த பொருளாதார பேராசிரியர் திரு முத்துராஜா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்த வரிக்குறைப்பின் மூலம் பால் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக ராணிப்பேட்டையை சேர்ந்த குடும்ப தலைவி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>><><><<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

திருச்சி அண்ணா பல்கலைக் கழகத்தில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அனைவருக்கும் வாய்ப்பும் வளர்ச்சியும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மையத்தை திருச்சி மண்டலத்தை சேர்ந்தவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு பழனிவேல் தியாகராஜன் கேட்டுக் கொண்டார்.

>><><><<

இஸ்ரோ தொடர்ந்து பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாக அதன் தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.

சென்னை அருகே தனியார் தொழில்நுட்பக் கல்லூரியின் பட்டமளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

>><><><<

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த இருதினங்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரைக் கண்ணன் கேட்டுக் கொண்டார்.

>><><><><<

## மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிய நியாயவிலைக் கடைகளை மாநில அமைச்சர் திரு மூர்த்தி இன்று திறந்து வைத்தார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர் நல வாரிய நிர்வாகக்குழு கலந்தாய்வுக் கூட்டம் ஆட்சியர் திருமதி அழகுமீனா தலைமையில் இன்று நடைபெற்றது.

--------------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ரயில்நிலையத்தில் தூய்மையே சேவை இயக்கத்தின்கீழ் திறன் இந்தியா பயிற்சி மாணவிகள் தூய்மைப்பணிகளை மேற்கொண்டனர்.

--------------------

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்று ஆட்சியர் திரு மோகனசுந்தரம் அறிவித்துள்ளார்.

--------------------

விழுப்புரம் மாவட்டத்தில் காவல்துறையினரின் வாகன சோதனையின் போது போதைப்பொருள் கடத்திய 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

>><><><><<

## விளையாட்டுச் செய்திகள்

ஜோஹர் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் தலைமையிலான இந்த அணியில் 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி மலேசியாவில் அடுத்த மாதம் 11 ஆம் தேதி தொடங்கி 18 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

----------------

ஆசிய Cadet வாள்வீச்சு போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

உத்தராகண்டின் Haldwani-யில் நடைபெற்ற இப்போட்டியின் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் இந்தியா கைப்பற்றியது.

----------------

இலங்கையில் நடைபெற்று வரும் 17 வயதிற்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

----------------

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிசுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் வெற்றிபெற்றார்.

>> End of News <<